## மகளிர் அரசியலின் சவால்கள்

சர்வஜன வாக்குரிமை மற்றும் அதற்கு இணையாக கடந்த எட்டு தசாப்தங்களாக வரலாற்று ரீதியாக இந்நாட்டில் இடம்பெற்ற தீர்மானமிக்க அரசியல் பரிமாற்றமாக கருதப்படுவது 1948இல் பெற்றுக்கொண்ட சுதந்திரமே ஆகும். அதற்கு பிறகு நாட்டில் ஏற்பட்ட இனப்பிரச்சினைகள் பல மற்றும் இளைஞர் போராட்டங்கள் இரண்டும் உட்பட இடம்பெற்ற அரசியல் கொந்தளிப்புக்கள் எண்ணிக்கை ரீதியில் மிக மிக அதிகமே. அவ் அரசியல் சம்பவங்களுள் பெரும் விவாதத்திற்குரிய சூழலை தோற்றுவித்த காரணியாக குறிப்பிடக்கூடிய ஒரு மாற்றமாக அமைவது பெண் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கென வழங்கப்பட்ட 25% கோட்டாவாகும். அது இந்நாட்டின் பெண் செயற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால போராட்டத்தின் ஒரு மைல்கல்லாகும். ஆயினும் இந்த ஆவணத்தின் மூலமாக ஆராயப்படுவது அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட அரசியல் பிரதிநிதித்துவத்தில் பெண்களது வகிபாகம் தொடர்பிலானதொரு விமர்சனமன்று. அவ்வாறு முன்னேற்றம் காண்பதற்கு முயற்சிக்கின்ற பெண் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு உந்துசக்தியாக செயற்படுகின்ற ஒரு செயற்பாடாகும். அதாவது தேர்தல் பிரசார நிதியாக்கம் மற்றும் பெண் அரசியல் ஆகிய இரண்டுக்கும் இடையில் காணப்படுகின்ற வெளிப்படையான தொடர்புகள் பற்றியதான சர்ச்சைகள் நிறைந்ததொரு சூழலில் பெரும் வாதவிவாதங்களுக்கு மத்தியில் அறிமுகம் செய்யப்பட்ட பெண் அரசியல் பங்குரிமையானது இன்று மாபெரும் அனர்த்த நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதற்குரியதான பல்வேறு காரணிகளால் அது ஏற்பட்டுள்ளது.

01. மகளிர் கோட்டாவைப் பயன்படுத்தி உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் பிரதிநிதிகளது செயற்திறன் மற்றும் செயற்திறனான பங்குபற்றலில் காணப்படுகின்ற சிக்கல் நிலைமை. எதிர்பார்த்த பிரதிபலனை பெற்றுக் கொண்டவர்களோ ஒரு சிலர் மாத்திரமே என்பதே காண்பதற்குள்ளது.
02. ஓரளவு சாதகமான மத்தியஸ்தத்தினை செய்து வருகின்ற பெண் செயற்பாட்டாளர்களுக்கு உரிய கட்சிகளில் எவ்விதமான ஒத்துழைப்பும் கிடைக்காமை.
03. சமூக பின்னணியினுள் பெண் அரசியல் பிரதிநிதித்துவத்தினை சிறந்த மனப்பாங்குடன் ஏற்றுக்கொள்கின்ற தன்மை காணக்கிடைக்காமை.

மஞ்சுள கஜநாயக்க, தேசிய இணைப்பாளர், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்